## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
## ஆத்தூர்
------
## அசல் வழக்கு எண்.3/2020

2025 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 17 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.2-இன் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய 10 வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சமுத்திரம் | ஜாதி | : | |
| த.பெ | : | ராயர் | தொழில் | : | ஜவுளி வியாபாரம் |
| கிராமம் | : | சித்தையன்கோட்டை | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 50/2025 |
| தேதி | : | 17.09.2025 | | | |

பிரதிவாதி தரப்பு குறுக்கு **விசாரணை**

நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள் என்றால் ஜவுளி எடுத்து வியாபாரம் செய்து வருகிறேன். நிலையான கடை அமைத்து நீங்கள் மேற்படி தொழிலை செய்து வருகிறீர்களா அல்லது வண்டியில் வைத்து நடைமாடும் கடை நடத்தி வருகிறீர்களா என்றால் வண்டியில் வைத்து நடைமாடும் கடை நடத்தி வருகிறேன். உங்களுக்கு எத்தனை குழந்தை என்றால் ஒரே மகள். உன் மகள் எந்த ஊரில் உள்ளார் என்றால் எனது ஏரான சித்தையங்கோட்டையில் உள்ளார். வாதிகளான பொன்னுச்சாமி ஜெயா உங்கள் உறவினர் என்றால் சரிதான். ஜெயா உங்களுக்கு என்ன உறவுமுறை என்றால் எனது உடன்பிறந்த அக்கா. உங்கள் அக்காவிற்கு அரசாங்கத்தில் காலணி வீடு கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. உங்கள் அக்காவிற்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 குழந்தைகள். உங்கள் அக்காவின் வீட்டிற்கு மேற்கு பக்கம் எம்.ஜி.ஆர், சாரதா உள்ளார்கள் என்றால் சரிதான். உங்கள் அக்கா வீட்டிற்கு கிழக்கு பக்கம் பூப்பாண்டி, முத்துராக்கு உள்ளார்கள் என்றால் சரிதான். சாட்சி பின்னிட்டு பக்கத்து தெருவில் இருக்கிறார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார். ஜெயாவின் மகன் எங்கு உள்ளார், எங்கு குடியிருந்து வருகிறார் என்றால் 5 வது வார்டு, ஜான் தெரு, சித்தையங்கோட்டையில் வசித்து வருகிறார். ஜெயாவின் மகன் குடியிருக்கும் வீடு காலணி தெருவில் உள்ளது என்றால் இல்லை. ஜெயாவிற்கும், ஜெயாவின் மகனுக்கும் காலணி தெருவில் அரசால் வழங்கப்பட்ட காலணி வீடு உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஜெயாவிற்கு 28 வருடத்திற்கு முன்பாக காலணி வீடு கொடுத்துளளார்கள் என்றும், அந்த காலணி வீட்டில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதி குடியிருந்து வரும் வீடானது சவரியம்மாள், மரியமுத்தம்மாள் என்பவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். வாதி ஜெயா ஏற்கனவே சவரியம்மாள், மரியமுத்தம்மாள் ஆகியோரிடம் வீட்டுக்கடன் பத்திரம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த கடன் தொகை எவ்வளவு என்றால் ரூ.1000/-. மேற்சொன்ன பத்திரத்தில் கடன் தொகையை தவிர வீட்டை கிரையம் செய்வதாகவோ, வீட்டை ஜெயாவிடம் ஒப்படைப்பதாகவோ குறிப்பிட்டு வாசகம் இல்லை என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. 19.11.1990 ம் தேதியிட்ட பத்திர ஆவண எண்.876/1990 பத்திரத்தின் விபரங்கள் எதுவும் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான் . 1000 ரூபாய் ஈடுகடன் மட்டும் தான் எனக்கு தெரியும். மேற்சொன்ன சவரியம்மாள், மரியமுத்தம்மாள் எப்போது இறந்தார்கள் என்றால் சரியாக

தெரியவில்லை. சவரியம்மாள் மற்றும் மரியமுத்தம்மாளுக்கு வாரிசு யாரும் உள்ளார்களா என்றால் எனக்கு தெரிந்தவரை இல்லை. சவரியம்மாள், மரியமுத்தம்மாள் மேற்சொன்ன 1990ம் ஆண்டு பத்திரத்தில் கையொப்பம் செய்துள்ளார்களா கைரேகை வைத்துள்ளார்களா என்றால் இரண்டு பேரும் கைரேகை வைத்துள்ளார்கள். மரியமுத்தம்மாள் கடந்த 27.04.2008ம் தேதியன்று இந்த பிரதிவாதியின் மனைவி பொன்னுப்பெருமாயி என்பவருக்கு இந்த வீட்டை ஒப்படைப்பது சம்மந்தமாக ஒரு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சவரியம்மாள், மரியமுதத்தம்மாளுக்கு பாத்தியப்பட்ட வீட்டில் பிரதிவாதி சமுத்திரம் தான் குடியிருந்து வருகிறார் என்றும், தாவா சொத்திற்கு வாரிசு இல்லாத காரணத்தினால் உங்களுடைய சகோதரி வழக்கு சொத்தை அபகரிப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 20.12.2019, 26.12.2019 ஆகிய தேதிகளில் வழக்கு சொத்தில் பிரச்சினை செய்ததாக சொல்லும் நாட்களில் நீங்கள் தாவா சொத்து உள்ள இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. உண்மையில் கடந்த 20 வருடங்களாக நீங்கள் தாவா சொத்து உள்ள ஊரில் இல்லை என்றும், நீங்கள் உங்கள் மனைவி மற்றும் மகளுடன் பெரம்பலூரில் தான் குடியிருந்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் உங்கள் சகோதரி சுவாதீனத்தில் இல்லை என்றும், உங்கள் சகோதரி அவர்களுக்கு கொடுக்கப்பட்ட காலனி வீட்டில் தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. உங்களிடம் காட்டப்படும் இவ்வழக்கின் வழக்குரையில் வாதியின் முகவரியில் வாதியின் பெயருக்கு அடுதது என்ன முகவரி உள்ளது என்றால் 5 வது வார்டு ஜான் தெரு என்று உள்ளது. நீங்கள் சொல்வது போல் வழக்குரையில் வாதியின் விலாசத்தில் 5 வது வார்டு ஜான் தெரு சித்தையங்கோட்டை என்று இல்லை என்றும், மார்க்கெட் ரோடு சித்தையங்கோட்டை என்று தான் உள்ளது என்றால் சரியல்ல. உங்களுடைய மகள் என்ன படித்துள்ளார் என்றால் இந்த வழக்கிற்கும் இந்த கேள்விக்கும் சம்மந்தம் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். உண்மையில் பெரம்பலூரில் உங்கள் மகள் படித்து வந்தார்கள் என்றும் அதை சொன்னால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யும்போது உண்மைத்தன்னை தெரிந்துவிடும் என்பதற்காக நீங்கள் மேற்சொன்ன கேள்விக்கு பதில் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. சவரியம்மாளுக்கு அந்தோனி, ஆரோக்கியசாமி என்ற 2 ஆண் மகன்களும், 2 பெண் குழந்தைகளும் கோயம்புத்தூரில் உள்ளார்கள் என்றும், உண்மையில் நீங்கள் தாவா சொத்து உள்ள ஊரில் இருந்திருந்தால் சவரியம்மாளின் வாரிசுகள் பற்றி உங்களுக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. மரியமுதத்தம்மாளுக்கு உடன்பிறந்த நபர்கள் வேறு யாரும் இல்லையா என்றால் எனக்கு தெரிந்து சவரியம்மாளும், மரியமுத்தம்மாள் இரண்டு பேரும் தான் உடன்பிறந்தவர்கள். மரியமுத்தம்மாளுக்கு உடன் பிறந்த 2 ஆண்களான மரியமுத்து, அடைக்கலம் என்ற இரண்டு சகோதரர்கள் உள்ளார்கள் என்றும், உண்மையில் நீங்கள் தாவா சொத்து உள்ள ஊரில் இருந்திருந்தால் மரியமுத்தம்மாளின் வாரிசுகள் பற்றி தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. மரியமுத்தம்மாளும், சவரியம்மாளும் இறந்து தோராயமாக எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் 10 வருடங்கள் இருக்கும். இரண்டுபேரும் இறந்து 10 வருடங்கள் இருக்குமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கின் உண்மைத்தன்மை எதுவும் தெரியாது என்றும், இந்த வழக்கின் வாதி உங்களுடைய சகோதரி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் நீங்கள் தாவா சொத்து உள்ள ஊரில் இருந்திருந்தால் வழககின் உண்மைத்தன்மை உங்களுக்கு தெரிந்திருக்கும் என்றும், நீங்கள் ஊரில் இல்லாததால் தான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தரப்பினருக்கிடையே மீண்டும் பிரச்சனை வந்ததா என்றால் அடிக்கடி பிரச்சனை வந்து கொண்டு உள்ளது. **(சாட்சி தானாக பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் எந்த கேள்வியுமே சாட்சியயிடம் கேட்காத போது நீதிமன்றத்தின் உத்தரவுக்கு கட்டுப்படாமல் தானாக வழக்கு சொத்து சம்மந்தமாக பின்னிட்ட நடந்த பிரச்சனையை நீதிமன்றத்தை தொடர்ந்து நடத்த விடாமல் சாட்சியம் அளித்து கொண்டே இருக்கிறார். வழக்கறிஞர் கேட்கும் கேள்விகளுக்கு மட்டும் பதில் அளிக்குமாறு சாட்சி நீதிமன்றத்தால் அறிவுறுத்தப்படுகிறார். தவறும்பட்சத்தில் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைக்கு நீங்கள் உட்படுத்தப்படுவீர்கள் என்று சாட்சியயிடம் அறிவுறுத்தப்பட்டது.**

**மேற்கொண்ட நடவடிக்கையின் போது வாதி தரப்பிலும் பிரதிவாதி தரப்பிலும் ஆஜரில் இருந்தார்கள் மற்றும் பிற வழக்கறிஞர்களும் ஆஜரில் இருந்தார்கள்.)** கடன் ஆவணம் எழுதிக்கொடுத்ததாக சொல்லும் நாளிலிருந்து எவ்வளவு காலங்கள் வாதிகள் இருந்தார்கள் என்று உங்கள் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியாக தெரியவில்லை. சவரியம்மாளுக்கும், மரியமுத்தம்மாளுக்கும் தாவா சொத்திலுள்ள வீடு மட்டும் தான் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீங்கள் வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**Sd/-Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor